# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி**
**வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 மே மாதம் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[65 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 144.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் இலத்திரனியல் தளத்தினூடாக வழங்கப்பட்ட சேவைகளுக்காக (இதனகத்துப்பின்னர் "சேபெவ" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சேர்பெறுமதி வரி அறவிடப்படுகின்ற தேதியை 2026, யூலை 1 ஆந் தேதிக்கு நீடிப்பதாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சேபெவரியின் நோக்கத்துக்காக திரைப்படக் கண்காட்சிச் சேவையொன்றின் வழங்குகையின் பெறுமதியைத் தீர்மானிப்பதில் (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அறவிடப்படும் களியாட்ட வரியின் கழிப்பனவை இயலச்செய்வதாகும்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், எளிமை யாக்கப்பட்ட சேர்பெறுமதி திட்டத்தை நீக்குவதன் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 5 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சேபெவரிக்காக ஆட்களைப் பதிவுசெய்வதற்கான தொடக்கநிலையைக் குறைப்பதற்கும், அத்தகையது 2026, யூலை 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக இருப்பதற்குமாகும்.

***வாசகம் 6 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் தொடக்கத் தேதியிலிருந்து இயைபான அட்டவணைகளின் சமர்ப்பிப்பை வசதிப்படுத்துவதாகும்.

***வாசகம் 7 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்காகும்: -

(அ) மீள் ஏற்றுமதி அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட, ஆனால் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிராத பொறித்தொகுதிகள், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள் அல்லது வாகனம் என்பவற்றின்மீதான உள்ளீட்டுக் கடன்களுக்கு அனுமதி மறுத்தல்; அத்துடன்

(ஆ) மொத்த விற்பனையில் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்ட ஆளொருவரினால் பதிவுத்தேதியன்றுள்ளவாறான விற்பனைசெய்யப்படாத பண்டங்களின் கையிருப்புக்கள் மீதான உள்ளீட்டுக் கடனை உரிமை கோருவதற்கான முற்தேவைப்பாடாக இருப்பதற்குப் பதிவேடுகளைப் பேணுதல்.

***வாசகம் 8 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ எனும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கானதாகும்: -

(அ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளின்கீழ் ஊழியர்களுக்கு வேதனாதிகளை வழங்குதல் தொடர்பாக அவசியமான விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்தல்; அத்துடன்

(ஆ) நிதிசார் சேவைகள்மீதான சேபெவரியை பதினெட்டு (18) சதவீதத்திலிருந்து இருபது தசம் ஐந்து (20.5) சதவீதமாக அதிகரித்தல்.

***வாசகம் 9 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அத்தியாயம் IIIஇ என்பதனை உட்புகுத்துகின்றது. புதிய அத்தியாயமானது எண்ணிம சேவைகள்மீதான பதிவுக்கும் வரிக்கொடுப்பனவுக்கும் ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 10 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 48இ என்னும் பிரிவை உட்புகுத்துகின்றது. புதிய பிரிவானது சுனாமிக் கருத்திட்டங்கள் தொடர்பில் தவணை தவறுகையிலுள்ள வரியைப் பதிவழிப்பதற்காக ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 11 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி திட்டத்தை நீக்குவதன் விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதாகும்.

***வாசகம் 12 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 64ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. புதிய பிரிவானது, சேபெவரியின் மொத்த விற்பனை வரவினதும் சேகரிப்பினதும் தகுந்த கணக்கீட்டை உறுதிப்படுத்துவதற்கு விற்பனைமுனைப் பொறிகளின் பயன்பாட்டுக்காக ஏற்பாடு செய்கின்றது.

***வாசகம் 13 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஆளொருவர் உரிமைகோருவதற்கு உரித்துடையவராகவிராத மீளளிப்பொன்றை உரிமைகோருகின்ற அத்தகைய ஆட்களுக்குத் தண்ட ஏற்பாடுகளை நீடிப்பதாகும்.

***வாசகம் 14 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது மீளளிப்பொன்றை உரிமைகோருவதற்கு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை அல்லது ஆவணங்களை வழங்குகின்ற அல்லது தேவையான தகவல்களை அல்லது ஆவணங்களைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்ற ஆளொருவருக்கு தண்ட ஏற்பாடுகளை நீடிப்பதாகும்.

***வாசகம் 15 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான தவறுகளுக்காக குற்றவியல் வழக்குநடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 16 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதும் வரி இணங்கியொழுகுகை உருவங்களை அடையாளம் காண்பதுமாகும்.

***வாசகம் 17 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது தெளிவு நோக்கத்துக்காக குறித்தசில பதங்களுக்கான வரைவிலக்கணங்களை அறிமுகப்படுத்துவதாகும்.

***வாசகம் 18 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் III ஐத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பந்தி (அ) வுக்குப் புதிய விடயமொன்றை அறிமுகப்படுத்துவதும் மற்றும் முறையே செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த தொழிலொன்றாக அடையாளங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தொழிலுக்கான பண்டங்கள் அல்லது சேவைகள் அத்துடன் வதிவுள்ளவராகவிராத ஆளொருவரினால் ஓர் இலத்திரனியல் தளத்தினூடாகக் குறித்தசில சேவைகளின் வழங்குகை என்பன தொடர்பாக அப்பாகத்துக்குப் (ஈ) என்னும் புதிய பந்தியை அறிமுகப்படுத்துவதுமாகும்.

ச.வ.-ஓ 33/2025

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இச்சட்டத்தில் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “2025, ஒற்றோபர் 1 ஆந் தேதியிலிருந்து” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2026, யூலை 1 ஆந் தேதியிலிருந்து” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (8) ஆம் உட்பிரிவில், “தொகையாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக “தொகையாதல் வேண்டும்:” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (8) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

> “ஆயின், சீட்டுகளை வழங்குவதன்மேல் திரைப்படக் கண்காட்சிக்காக சேவையொன்று வழங்கப்படுமிடத்து, (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின்கீழ் உள்ளூரதிகார சபையொன்றினால் அறவிடப்பட்ட “களியாட்ட வரியானது” இவ்வுட்பிரிவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கழிவுகளுக்கு மேலதிகமாகக் கழிக்கப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) எனும் பந்தியின் (vii) ஆம் உட்பந்தியில், "கடல்கடந்த கொள்வனவுகாரர்களுக்கு வழங்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2025, ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் கடல்கடந்த கொள்வனவுகாரர்களுக்கு வழங்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அதன் பந்தி (ஆ) வின் (vii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :

"(vii) ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட தைத்த ஆடைகளை வாங்கும் அலுவலகத்தினால் கடல்கடந்த கொள்வனவுகாரர்களுக்கான சேவைகள், 2025 ஒற்றோபர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவருக்கு வழங்கப்படும் அளவுவரை அத்தகைய சேவைகளின் வழங்குகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) பந்தி (viii) இல், "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2026, யூன் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) பந்தி (ix) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(x) 2026, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் –

(அ) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட, அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஒன்பது மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டு மாதகாலப் பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி முப்பத்தாறு மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) அடுத்துவரும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட, அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும்

சேவைகளினதும் வரிவிதிக்கப் படற்பாலனவான வழங்கல் களின் மொத்தப் பெறுமதி ஒன்பது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாதகாலப் பகுதியில் முப்பத்தாறு மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவ தற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்திக்கான காப்புவாசகத்தில், "ஆணையாளர் தலைமையதிபதி அனுமதியளிக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதி அனுமதியளிக்கலாம்:" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்புவாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"ஆயின் மேலும், எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆள் இயைபான வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின் தொடக்கத் தேதியிலிருந்து பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணைகளைக் கொடுத்துத வலாம்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (vi) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(vii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கருத்திட்டங்களில் பயன்படுத்து வதற்காக இறக்குமதிசெய்யப்பட்ட பொறித்தொகுதிகள், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள் அல்லது வாகனங்கள் மீதான வரிகளின் செலுத்துகை பின்போடப்பட்டு கருத்திட்டம் முடிவடைவதிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்தகைய பொறித்தொகுதிகள், இயந்திரத்தொகுதி, உபகரணங்கள் அல்லது வாகனங்கள் மீள்- ஏற்றுமதி செய்யப்படாதிருப்பின்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (14) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(15) இப்பிரிவின் முரணாக எது எவ்வாறிருப்பினும், மொத்தவிற்பனை அல்லது சில்லறை வியாபாரத்தில் பண்டங்களை வழங்குகின்ற எவரேனுமாள், 2026 எப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுமிடத்து, மற்றும் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படாதவையும், பதிவுத் தேதியன்றுள்ளவாறு அத்தகைய ஆளின் விற்கப்படாதுள்ளவையுமான கையிருப்புகள் எஞ்சியிருப்பின், எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போது அத்தகைய கையிருப்புகளின் கணக்கின்மீது பதிவானது பயனுறுவதாக வருகின்றதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாகவும் அத்தகைய பண்டங்கள் கொள்ளப்பட்ட

நேரத்தில் வலுவிலுள்ளதுமான அத்தகைய வீதத்தில் கணிக்கப்பட்டதுமான, கருதப்பட்ட உள்ளீட்டு வரியானது அத்தகைய ஆளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய விபரங்களை உள்ளடக்கியும் இவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களின் விற்கப்படாதுள்ள கையிருப்புகள் தொடர்பில் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் பதிவானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது பயனுறுவதாக வருகின்றதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான இயைபான விபரத்திரட்டுடன் சேர்த்து அத்தகைய பதிவேடுகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது : முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ எனும் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சகல ஊழியர்களுக்கும் செலுத்தப்படும் வேதனாதிகள்" என்னும் சொற்களில் தொடங்கி "முழுமொத்த ஊதியம்; அத்துடன்;" என்னும் சொற்கள் வரையிலான சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"எல்லா ஊழியர்களுக்கும் செலுத்தப் படற்பாலனவான வேதனாதிகள் பின்வருவன வற்றை உள்ளடக்குதல் வேண்டும் –

(அ) (i) 2018 ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னரான ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க,

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XIV ஆம் அத்தியாயத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஊழியர்களின் விடயத்தில், அச்சட்டத்தின் 119 ஆம் பிரிவின்கீழ் பேணப்படும் சம்பளப் பட்டியலில் பிரதிபலிக்கப்பட்டதுமான அத்தகைய ஊழியர்களுக்கு செலுத்தப்படற்பாலதான முழுமொத்த ஊதியம்;

(ii) 2018 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ளடக்கப்பட வேண்டுமென, ஆனால் சொல்லப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட, ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் புறநீங்கலாக எவையேனும் ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள்:

ஆயின், இவ்வுட்பிரிவின் (i) ஆவது விடயத்துடன் இணங்கியொழுகுவதில் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது வேறு ஆள், 2026 சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான 25ஆ என்னும் பிரிவின்கீழான விபரத்திரட்டொன்றை கொடுத்துதவுகின்றவிடத்து, அத்தகைய விபரத்திரட்டு இவ்வுட்பிரிவுடன் இணங்கியொழுகுவதில் கொடுத்துதவப்

பட்டிருக்கின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக ஈட்டுகை மற்றும் இலாபம் நியாயமான சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும்.”.

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், “2022, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு பதினெட்டுச் சதவீதமாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2022, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும், ஆனால் 2026 யூன் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு பதினெட்டுச் சதவீதமாதல் வேண்டும்”;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(ஏ) 2026, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு இருபது தசம் ஐந்து (20.5) சதவீதமாதல் வேண்டும்.”.

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(உ) எந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அல்லது ஓர் ஓய்வூதிய நிதியத்திற்கு அல்லது ஏதேனும் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கத்திற்கு அல்லது சேமநல நிதியத்திற்கு ஊழியர்களினால் மட்டுமே உதவுதொகைகள் அளிக் கப்படுகின்றனவோ அவையும், அல்லது ஏதேனும் அங்கீகரிக் கப்பட்ட பணிக்கொடை நிதியமும் உட்பட, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திற்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபம் அல்லது வட்டி மீதான வருமானம் அல்லது இவ்வத்தியாயத்தின் கருத்துக்குட்பட "குறித்துரைக் கப்பட்ட நிறுவனம்" ஒன்று தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப் படாதவரும் ஆனால் ஒரு நிதிக் கம்பெனியினால் வழங்கப்பட்ட சேவைகளையொத்த சேவை களை வழங்குகின்ற வருமான ஆளொருவருக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற (ஒரு தொழிலிலிருந்தான இலாபங்கள் அல்லாத) வட்டிவருமானம்;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "ஆளொருவருக்கு எழுகின்ற பங்கிலாப வருமானத்திற்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஆளொருவருக்கு எழுகின்ற பங்கிலாப வருமானத்திற்கு.

ஐயத்தை தவிர்ப்பதற்காக, குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாக விராத ஆளொருவரினால் அல்லது

எந்த ஆளின் தொழில் வருமானம் 25ஊ என்னும் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (எ) அல்லது (ஏ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சேவைகளை வழங்குவதன்மூலம் ஈட்டப்படுவதில்லையோ அந்த ஆளினால் பெறப்பட்ட பங்கிலாப வருமானமானது தொழிலிலிருந்தான இலாபமாகக் கருதப்படுதலாகாது எனக் குறிப்பிடப்படுகின்றது;”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் IIIஇ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஆ என்னும் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் IIIஇ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும் :

## “அத்தியாயம் IIIஇ

### எண்ணிம சேவைகள் மீதான வரியின் பதிவும் கொடுப்பனவும்

எண்ணிம சேவைகளை வழங்குகின்ற ஆட்கள் பதிவு செய்யப் படுதல்

**25ஔ.** (1) பிரிவு 10 இல் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு (இதனகத்துப்பின்னர் “எண்ணிம சேவைகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் தள மொன்றினூடான சேவைகளை வழங்குகின்ற வதிவுள்ளவரல்லாத ஆளொருவர் பின்வருமாறாகவிருப்பின் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் –

(அ) 2026, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டு மாதங்களினுள் அத்தகைய சேவைகளின் வழங்குகையினது மொத்தப் பெறுமதி முப்பத்தாறு மில்லியன் ரூபாவை அல்லது

வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சியிருப்பின்; அல்லது

(ஆ) 2026, யூலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டுக்காக, காலாண் டொன்றுக்கான அத்தகைய சேவைகளினது வழங்கலின் மொத்தப் பெறுமதி ஒன்பது மில்லியன் ரூபாவை அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுவதாகவிருப்பின் அல்லது விஞ்சுவதற்கான சாத்தியத்தைக் கொண்டிருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவு செய்யப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும், எத்தேதியன்று பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுகின்றாரோ அத்தேதியிலிருந்து அல்லது ஆணையாளர் தலைமையதிபதி எத்தேதியன்று படிவத்தை குறித்துரைத்துள்ளாரோ அத்தேதியிலிருந்து, இவற்றுள் எது பிந்தியதாக வருகின்றதோ அதிலிருந்து, மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்தில் இலத்திரனியல் முறையில் பதிவுக்காக விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல், (இதனகத்துப்பின்னர் "பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வதிவுள்ளவரல்லாத ஆளொருவரைப் பதிவுசெய்து பதிவுச்சான்றித ழொன்றை வழங்குதலும் வேண்டும்.

(4) பதிவுச் சான்றிதழானது –

(அ) ஆளையும் அமைவிடத்தையும் அடையாளம் காண்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக, பதிவு செய்யப்பட்ட வதிவுள் ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி, வதியும் நாடு, பதிவு பயனுறும் தேதி மற்றும் சேர்பெறுமதி வரி பதிவிலக்கம் மற்றும் வேறு இயைபான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒன்றில் இலத்திரனியல் முறையில் அல்லது எழுத்தில் வழங்கப்படலாம்.

(5) வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநரால் பெறப்படுவதற்கு அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட கிடைக்கக் கூடியதான தகவலின் அடிப்படையின் மீது அத்தகைய சேவைகளை வழங்குகையில் பின்வரும் நிபந்தனைகளுள் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்டவை திருப்திப் படுத்தப்படுகின்றவிடத்து, பின்வருமாறு எண்ணிம சேவைகளின் பெறுநர் ஒருவர் இலங்கையில் ஆளொருவராக கருதப்படுதல் வேண்டும் :-

(அ) பெறுநரின் சிட்டையிடுதல், வதிவிட அல்லது தொழில் முகவரி இலங்கையில் உள்ளது;

(ஆ) அத்தகைய எண்ணிம சேவை களுக்கான கொடுப்பனவு இலங்கையிலுள்ள ஒரு வங்கியினூடாக அல்லது நிதி நிறுவனத்தினூடாக மேற் கொள்ளப்படுகின்றது;

(இ) கொடுக்கல் வாங்கலுக்காகப் பயன்படுத்தப்பட்ட கொடுப்பனவுச் சாதனம் இலங்கையில் வழங்கப்படுகின்றது; அல்லது

(ஈ) பெறுநரினால் பயன்படுத்தப்பட்ட உபாயத்தின் இணையத்தள நெறிமுறை முகவரி இலங்கையில் அமைந்துள்ளது.

எண்ணிம சேவை வழங்குநர்களின் பதிவை இல்லாதாக்குதல்

**25க.** (1) ஆணையாளர் தலைமையதிபதி–

(அ) பதிவு செய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத ஆள் 25ஔ எனும் பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவரல்லரெனக் கண்டறியுமிடத்து;

(ஆ) சேவைகளின் வழங்கல் ஆறு மாதங்களுக்குமேல் இல்லாதொழிந்துள்ளவிடத்து; அல்லது

(இ) எண்ணிம சேவைகளின் வழங்குகையினது மொத்தப் பெறுமதி, இரண்டு தொடர்ச்சியான வரி விதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்காக 25ஔ எனும் பிரிவில் தரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சாதவிடத்து,

பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநர் எண்ணிம சேவைகளை வழங்குவதிலிருந்து

இல்லாதொழிந்துள்ளவிடத்து அல்லது எண்ணிம சேவைகளின் வழங்குகையினது மொத்தப் பெறுமதி, இரண்டு தொடர்ச்சியான வரிவிதிக்கப்படற்பாலனவான காலப் பகுதிகளுக்காக 25ஔ எனும் பிரிவில் தரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சாதவிடத்து மற்றும் அத்தகைய சேவை வழங்குநர், விடயத்துக்கேற்ப, அத்தகைய இல்லாதொழிப்புத் திகதியிலிருந்து அல்லது அத்தகைய தொடர்ச்சியான வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகள் முடிவுறும் திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் பதிவை இல்லாதாக்கும்படி ஆணையாளர் தலைமையதிபதிக்கு கோரிக்கையொன்றை விடுக்குமிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதி அதற்கென விடுக்கப்பட்ட கோரிக்கைபற்றி திருப்திப்படின் அவர் அப்பதிவை இல்லாதாக்கலாம்.

(3) பதிவொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, பயனுறும் தேதி மற்றும் அத்தகைய இல்லாதாக்குகைக்கான காரணங்கள் என்பவற்றுடன் அத்தகைய இல்லாதாக்குகை பற்றி எண்ணிம சேவை வழங்குநருக்கு அறிவித்தல் வேண்டும்.

பதிவு செய்யப் பட்ட ஆட்களுக்கு வதிவுள்ள வரல்லாத ஆட்கள் மூலம் எண்ணிம சேவைகளை வழங்குதல்

**25ங.**(1) பிரிவு 2 இனதும் இவ்வத்தியாயத்தினதும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட வரியானது இலத்திரனியல் தளமொன்றினூடாக வதிவுள்ளவரல்லாத ஆளொருவரினால் வழங்கப்பட்ட சேவைகளின் வழங்குகைக்காக, அத்தகைய சேவைகளின் பெறுநர் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராக உள்ளவிடத்து, அறவிடப் படுதலாகாது அல்லது சேகரிக்கப்படுதலாகாது:

ஆயின், பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ள வரல்லாத எண்ணிம சேவை வழங்குநரொருவர் எண்ணிம சேவைகளின் வழங்குகைக்கான வரியை அறவிட்டுள்ளவிடத்து அல்லது சேகரித்துள்ளவிடத்து அத்தகைய சேவை வழங்குநர் அவ்வாறு அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரியை சேவைகளின் அத்தகைய வழங்குகையின் பெறுநருக்கு மீளளித்தல் வேண்டும்:

ஆயின் மேலும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு வரியானது அனுப்பப்பட்டிருந்தமையினால் அவ்வாறு அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரியை சேவை வழங்குநர் மீளளிப்பதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய சந்தர்ப்பத்தில் பின்வரும் ஏற்பாடுகள் அவ்வாறு அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரிக்கு ஏற்புடையற் பாலனவாதல் வேண்டும்:-

(அ) எண்ணிம சேவைகளின் வழங்குகை தொடர்பில் அத்தகைய வரி ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆளினால் பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநருக்கு செலுத்தப்படின் உள்ளீட்டு வரியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆள் இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்படத்தக்க அளவுக்கு வெளியீட்டு வரியிலிருந்து அத்தகைய உள்ளீட்டு வரியைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

(ஆ) உள்ளீட்டு வரியை உரிமை கோருகின்ற நோக்கத்துக்காக,

அறவிடப்பட்ட சேர்பெறுமதி வரியை தனிவேறாகக் குறித்துரைக்கின்றதும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநரொருவரினால் வழங்கப்பட்டதுமான விலைப் பட்டியொன்று செல்லுபடியான வரி விலைப்பட்டியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சேவைகளின் வழங்கலொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரி விதிப்பிலிருந்து நீக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய வழங்கலைச் செய்கின்ற வதிவுள்ளவரல்லாத ஆள், விதித்துரைக்கப்பட்ட முறையிலும் மற்றும் விதித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள்ளும் பதிவுசெய்யப்பட்ட ஆட்களுக்குச் செய்யப்பட்ட வழங்கல்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கி எளிமைப்படுத்தப்பட்ட கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றானது பின்வரும் விபரங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, செலுத்துகைத் தேதி அல்லது விலைப்பட்டியல் தேதி;
(ஆ) பெறுநரின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கம்;
(இ) பெறுநரின் பெயர்;
(ஈ) வழங்கலின் பெறுமதி;
(உ) விலைப்பட்டியல் இலக்கம்; அத்துடன்
(ஊ) வழங்கப்பட்ட சேவை பற்றிய விவரம்.

(4) எவரேனுமாள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி –

(அ) அத்தகைய ஆள்மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு பணத்தொகைக்கான தண்டமொன்றை விதித்து அத்தகைய தண்டவிதிப்புப்பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் முறைகள் மூலம் அறிவித்தல் கொடுக்கலாம்;

(ஆ) அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அல்லது இலத்திரனியல் முறைகள் மூலம் பின்வருவனவற்றுக்கான அறிவித்தலைக் கொடுக்கலாம் –

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்கு; அத்துடன்

(ii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப் பகுதியினுள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு.

(5) எவரேனுமாள் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியயொழுகுவதற்கான அவரது தவறுகையானது அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாலான சூழ்நிலைகள் காரணமாக இருந்ததென்றும் மற்றும் உடனடுத்து அவர் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளார் என்றும் ஆணையாளர் தலைமையதிபதியின்

திருப்திக்கு எண்பித்தால், ஆணையாளர் தலைமையதிபதி, (4) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வின்கீழ் அத்தகைய ஆள்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தைக் குறைக்கலாம் அல்லது ஒழிக்கலாம்.

எண்ணிம சேவைகளின் வழங்குகைக் கான காலம், பெறுமதி மற்றும் முறை

**25ச.** (1) எண்ணிம சேவைகளின் வழங் கலுக்கான காலமும் பெறுமதியும் 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, இவ் வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக பதிவு மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் பற்றிய முறையை விதித்துரைக்கலாம்.

எண்ணிம சேவைகள் மீதான வரிக் கொடுப்பனவு

**25ஞ.** (1) பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநரொருவரினால் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரியானது 26 ஆம் பிரிவுக்கிணங்க பின்வரும் முறைகளில் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தின் நிகழ்நிலை முறைமை யினூடாக அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக் கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இலத்திரனியல் கொடுப்பனவு வசதியினூடாக இலத்திரனியல் அனுப்புகைமூலம்;

(ஆ) அந்நோக்கத்துக்காக பெயர் குறிக்கப்பட்ட வங்கிக் கணக் கொன்றுக்கு அனுப்பப்பட்ட இலங்கை ரூபாக்களில் அல்லது

ஆணையாளர் தலைமையதிபதியினால் அனுமதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வெளிநாட்டு நாணயத்தில்;

(இ) ஒன்றில் நேரடியாக வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநரினால் அல்லது அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியின் ஊடாக.

(2) ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய கொடுப்பனவுக்கான நடவடிக்கை முறைகளையும் தேவைப்பாடுகளையும் குறித்துரைக்கலாம்.

விபரத் திரட்டுகளும் தொடர் பாடலும்

**25ட.** (1) பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநர் ஒவ்வொருவரும், 21 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி ஒவ்வொன்றுக்குமான விபரத்திரட்டொன்றை ஓர் இலத்திரனியல் முறையில் கோப்பிடுதல் வேண்டும்.

(2)எல்லாஅறிவித்தல்களும்,ஆவணங்களும் அல்லது தகவல்களும் ஓர் இலத்திரனியல் முறைமூலம் வதிவுள்ளவரல்லாத ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட வதிவுள்ளவரல்லாத எண்ணிம சேவை வழங்குநர் ஒவ்வொருவரும் ஒரு விலைப்பட்டியல் அடிப்படையில் இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வரிக்குக் கணக்குக்காட்டுதல் வேண்டும்.

(4) வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதிலிருந்து எழுகின்ற ஏதேனும் வேறுபாடானது விபத்திரட்டுகளைச்

சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காகப் புறக் கணிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வேறுபாடானது இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தவணை தவறிய வரியாக அல்லது மீளளிப்பாகக் கருதப் படுதலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48இ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 48இ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"சுனாமி நிவாரணக் கருத் திட்டங்கள் தொடர்பில் தவணை தவறிய வரியை பதிவழித்தல்

**48இ.** சுனாமி நிவாரணக் கருத்திட்டங்கள் செயற்பாடுகள் தொடர்பில் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்கள் தொடர்பிலும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வழங்கல்களுக்கான வரியின் கொடுப்பனவு இலங்கை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளவிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதியின் பதிவேடுகளின்படி, பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் இச்சட்டத்தின்கீழான தவணை தவறியுள்ள வரியை ஆணையாளர் தலைமையதிபதி பதிவழித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) அல்லது (ஊ) என்னும் பந்திகளில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் –

"(5) ஆணையாளர் தலைமையதி பதியினால் அதிகாரமளிக்கப்பட்ட

எவரேனும் அலுவலர் 22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியும், ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கவும் ஆபத்து அடிப்படையிலான மீளளிப்புத் திட்டத்தின் கீழ் மீளளிப்பொன்றைச் செய்துள்ளவிடத்து, அவர் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மீளளிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய அலுவலர் அத்தகைய மீளளிப்புத் தொடர்பில் எல்லா குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகளுக்கு எதிராகவும் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுகின்றார்.".

முதன்மைச் சட்டவாக் கத்தில் 64ஆ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 64ஆ என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாதுகாக்கப் பட்ட விற்பனை முனைப் பொறிகளின் பயன்பாடு

**64ஆ.** (1) பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளும், விதித்துரைக்கப்படக் கூடியவாறான முறையில், அவ்வாறு விதித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அவரினால் நிறைவேற்றப்பட்ட வரிவிதிக்கப்படற் பாலனவான செயற்பாடுகள் தொடர்பிலான எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்காகவும், விலைப்பட்டியல்களின் வழங்குகைக்காகவும் மற்றும் பதிவேடுகளை முகாமைசெய்வதற்கும் பேணுவதற்கும் பாதுகாக்கப்பட்ட விற்பனை முனைப் பொறிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக "பாதுகாக்கப்பட்ட விற்பனை முனைப்

பொறி" என்பது, விதித்துரைக்கப்பட்ட முறையில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க மொத்த விற்பனை வரவின் முறையான கணக்கீட்டையும், சேர்பெறுமதி வரியின் சேகரிப்பையும் மற்றும் அனுப்புகையையும் உறுதிப்படுத்தும் வகையில் பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்குகையைப் பதியும், விலைப்பட்டியல்களை அல்லது பற்றுச்சீட்டுக்களைத் தோற்றுவிக்கும் மற்றும் அதேநேரத்தில் கொடுக்கல்வாங்கல் தரவுகளை ஈர்க்கும் நோக்கத்துக்காக, பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் பயன்படுத்தப்படுகின்றதுமான ஓர் இலத்திரனியல் உபாயம் அல்லது முறைமை என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளிலக்கமிடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "தவிர்க்க எத்தனிக்கும்" எனும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "வரியை தட்டிக்கழிப்பதற்கு எத்தனிக்கும் அல்லது வேண்டுமென்றும் மோசடியான முறையிலும் மீளளிப்பொன்றை உரிமைகோருகின்ற அல்லது உரிமைகோர எத்தனிக்கும் அல்லது வேறெவரேனும் ஆள் உரித்துடையவராகவிராத மீளளிப்பொன்றை வேண்டுமென்றும் மோசடியான முறையிலும் உரிமைகோரும் அல்லது உரிமைகோர எத்தனிக்கும் அவ்வாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்

வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர், விடயத்துக்கேற்ப, (2) ஆம் உட்பிரிவில் அல்லது (3)ஆம்உட்பிரிவில்குறித்துரைக்கப்பட்டவாறான பணத்தொகையொன்றிலான குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2) இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக –

(அ) தவறானது எந்த வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச் சட்டத்தின்கீழ் அவர் ஆளாக விருக்கின்றதும், அவ்வாறு தட்டிக்கழிக்கப்பட்டதும் அல்லது தட்டிக்கழிக்கப்படுவதற்கு எத்தனிக்கப்பட்டதுமான வரித்தொகையின் இரு மடங்குகளுக்குச் சமமான பணத் தொகையொன்று; அத்துடன்

(ஆ) இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்று அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்.

(3) இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று

அல்லது அதன்பின் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக –

(அ) தவறானது எந்த வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் புரியப்பட்டதோ அந்த வரிவிதிக்கப் படற்பாலதான காலப் பகுதிக்காக இச்சட்டத்தின்கீழ் அவர் ஆளாகவிருக்கின்றதும், அவ்வாறு தட்டிக்கழிக்கப் பட்டதும் அல்லது தட்டிக்கழிக்கப் படுவதற்கு எத்தனிக்கப்பட்டதும் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவர் உரித்துடையவராகவிராத ஒரு மீளளிப்பை வேண்டுமென்று அல்லது மோசடியான முறையில் உரிமை கோருகின்றதும் அல்லது உரிமைகோருவதற்கு எத்தனிக்கின்றதுமான வரித் தொகையின் இரு மடங்குகளுக்குச் சமமான பணத்தொகையொன்று; அத்துடன்

(ஆ) ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையென்று அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ங) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் –

"(ச) மோசடி, பிறழ்பிரதிநிதித்துவம், அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை அல்லது ஆவணங்களை வழங்குவதன்மூலம், அல்லது ஏதேனும் முக்கியமான நிகழ்வை மறைத்து வைப்பதன்மூலம் வரியின் மீளளிப்பைப் பெறுகின்றமை அல்லது பெறுவதற்கு எத்தனிக்கின்ற; அல்லது

(ஞ) 21 ஆம் பிரிவின்கீழ் தேவைப் படுத்தப்பட்டவாறு செல்லுபடியான வரி விலைப்பட்டியலை அல்லது சுங்கப் பண்ட வெளிப்படுத்துகைகளை அல்லது வேறு மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை கொடுத்துதவத் தவறுகின்ற ;".

(2) அப்பிரிவில், "இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்" எனும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் –

"இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் –

(i) இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம்,

மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ii) இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்

**68.** (1) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புலனாய்வு செய்யலாம்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட பேராளர் ஒருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆளுக்கெதிராக குற்றவழக்குத் தொடுத்தல் வேண்டும். அத்தகைய குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் பேரில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கைகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கொணரப்படக்கூடிய குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

(4) தனியொரு செயல், விட்டுவிடுகை அல்லது நடத்தைநெறி தொடர்பில் இவ்வத்தியாயத்தின்கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகைக்காக ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுமிடத்து-

(அ) தவறுகளுக்காக விதிக்கப்பட்ட அதிகபட்ச மறியற்றண்டனைக்காலம் ஐந்தாண்டு காலத்தை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) அவ்வாளுக்கெதிராக அதே செயல், விட்டுவிடுகை அல்லது நடத்தைநெறி தொடர்பாக மேலதிகத் தவறுகளுக்காக அதற்குப்பின்னர் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலாகாது.

(5) பின்வருமிடத்து, ஆளொருவரினாலான ஒரு செயல், விட்டுவிடுகை தொடர்பில் அல்லது நடத்தைநெறியில் அத்தியாயம் XII இன்கீழ் தண்டமெதுவும் செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது:-

(அ) அதே செயல், விட்டுவிடுகை அல்லது நடத்தைநெறி தொடர்பில் அவ்வாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு இருக்குமிடத்து; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியின் சம்மதத்துடன் தவறானது நீதிமன்றத்தினால் இணக்கப் பட்டிருக்குமிடத்து.

(6) சார்த்தப்பட்ட தவறானது பின் வருவனவற்றை உட்படுத்துமிடத்து, இச்சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கை களைத் தொடங்கலாம்:-

(அ) செயலொன்று புரியப்பட்டதிலிருந்து பன்னிரெண்டு ஆண்டுகளினுள் அச்செயலைப் புரிதல்;

(ஆ) செயலொன்று புரியப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட திகதி யிலிருந்து பன்னிரெண்டு ஆண்டுகளினுள் அல்லது அத்தகைய தவறுதல் பற்றி ஆணையாளர் தலைமையதிபதி முதன்முதலாக அறியவரும் தேதியிலிருந்து மூன்றாண்டுகளினுள், எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து அச்செயலைப் புரிவதற்குத் தவறுதல்; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் இயைபான வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக எந்தத் தேதியன்று ஆளொருவரின் சரியான வரிப்பொறுப்பு இறுதியாகத் தீர்மானிக்கப்படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளினுள், அவ்வாளின் வரிப்பொறுப்புத் தொடர்பான தகவல்கள் வெளிக்காட்டப் படாமையை அல்லது பிழையாக வெளிக்காட்டப் பட்டமையை சார்த்தப்பட்ட தவறு உட்படுத்துமிடத்து.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) ஓராம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் பெயர், முகவரி மற்றும் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட வரிப் பதிவு இலக்கம் அத்துடன் அத்தகைய வரிப்பதிவின் நிலைமை என்பன, பகிரங்க வெளிப்படையானதன்மையை உறுதிப்படுத்துதல், வரி இணங்கியொழுகுகை உருவகங்களை அடையாளம் காண்பதனை இயலச்செய்தல் மற்றும் இச்சட்டத்தின் 25ங எனும் பிரிவின் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினதும் வேறேதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளின் நிருவாகத்தையும் வலுவுறுத்துகையையும் வசதிப்படுத்துகின்ற நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ""கல்விச் சேவைகள்" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"இலத்திரனியல் தளம்" என்பது, சேவை பெறுநர்களுக்குச் சேவைகளை வழங்குவதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சேவை வழங்குநர்களை இயலச்செய்விக்கின்ற இணையத்தளம் ஊடாகத் தொழிற்படுகின்ற ஏதேனும் நிகழ்நிலை முறைமை, வலைத்தளம், கைத்தொலைப்பேசிச் செயலி அல்லது வேறு எண்ணிம இடைமுகம் எனப் பொருள்படும் ; ";

(2) ""தகவுடைய ஏற்றுமதியாளர்" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

""தகவுடைய ஏற்றுமதியாளர்" என்பது, முற்போந்த பஞ்சாங்க ஆண்டின்

போது, 7 ஆம் பிரிவின்கீழ் குறித் துரைக்கப்பட்டவாறு எந்தப் பதிவு செய்யப்பட்ட ஆளின் பூச்சியம் வீதமிடப் பட்ட வழங்கல்களின் பெறுமதி, அதே காலப்பகுதியின் போது அந்தப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட வழங்கல்களின் மொத்தப் பெறுமதியைவிடவும் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமாகவுள்ளதோ அந்த ஆள் என்று பொருளாகும் ; ";

(3) "நிறைவேற்றுநர்" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரவைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""நிலையான இடம்" என்பது, ஆளொருவரின் கையாளுகை உள்ளதும், அதிலிருந்து அவ்வாள் அவ்விடத்தில் அமைந்துள்ள மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்தி, கிரமமாகச் சேவைகளை வழங்குகின்றதும் அல்லது அவ்வாளின் தொழிற்செயற்பாடுகளின் நோக்கங்களுக்காகச் சேவைகளைப் பெற்று பயன்படுத்துகின்றதுமான ஓர் இடம் எனப் பொருள்படும்;";

(4) "அமைச்சர்" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரவைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""கல்விசார் பாடநெறிகள் தொடர்பான சந்தையிடம்" என்பது, பன்முக சுயாதீன அறிவுறுத்துநர்களை அல்லது கல்விசார் நிறுவனங்களை கற்போருடன் இணைக்கும் மத்திமயப்படுத்தப்பட்ட மையமொன்றாகச் சேவையாற்றுகின்ற ஓர் எண்ணிம தளத்தில் வழங்கப்படும் ஒரு கல்விசார் அல்லது பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டம் எனப் பொருள்படும்;

"வதிவுள்ளவரல்லாத ஆள்" என்பது, முதல்வர் என்றவாறாயினுஞ்சரி அல்லது

முகவர் என்றவாறாயினுஞ்சரி சேவைகளின் வழங்குகைகளுடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அவ்வப்போது அல்லது வேறுவகையில் பொறுப்பேற்கின்ற ஆனால் இலங்கையில் நிலையான தொழிலிடமொன்றைக் கொண் டிராத எவரேனுமாள் எனப் பொருள்படும் என்பதுடன், நிலையான தொழிலிடம் ஒன்றைக் கொண்டிராமல் ஆனால், 55 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு ஆளொருவர் சார்பில் செயற்படுவதற்கு முகவரொருவரை கொண்டிருந்து இலங்கையில் வரிவிதிக்கப் படற்பாலதான ஒரு செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற, 10 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய ஆளொருவரை உள்ளடக்காது;"; அத்துடன்

(5) "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி "எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தின் (3) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியில் பின்வருமாறாக இடுவதன்மூலமும்:-

(அ) உட்பந்தி(ii)இல்,"தொடங்கியுள்ளதுடன் 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவிற்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "தொடங்கியுள்ளதுடன் கருத்திட்ட நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதியின்போது 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களையும் எண்களையும்; அத்துடன்

(ஆ) உட்பந்தி (iii) இல், "எவரேனுமாள் கருத்திட்ட நடைமுறைப்படுத்துகைக் காலப்பகுதியின் போது இச்சட்டத்துக்கான" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "எவரேனுமாள் இச்சட்டத்துக்கான" என்னும் சொற் களையும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் III இல் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் பந்தி (அ) வில், விடயம் (xi) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(xii) இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, தேசிய நலனைக் கருத்திற்கொண்டு அல்லது தேசியப் பொருளாதாரத்தின் முன்னேற்றத்தின் பொருட்டு செயல்நுணுக்க முக்கியத்துவமுள்ள தொழிலொன்றாக அடையாளங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தொழிலுக்கான பண்டங்கள் அல்லது சேவைகள்.”;

(2) அப்பாகத்தின் (ஈ) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(உ) வதிவுள்ளவரல்லாத ஆளொருவரி னாலான ஓர் இலத்திரனியல் தளத்தினூடான பின்வரும் சேவைகளின் வழங்குகை:-

(i) நிகழ்நிலை கற்கைநெறிகள், கருத்தரங்குகள், பயிற்சிகள், எண்ணிம கல்வித் தளங்கள், மெய்நிகர் வகுப்பறைகள், கற்றல் முகாமைகள் மற்றும் சந்தை இடங்களிலுள்ள கற்கைநெறிகள் உள்ளடங்கலான கல்விசார் சேவைகள்;

(ii) நிகழ்நிலை கலந்தாலோசனைகள், எண்ணிம மருத்துவச்சீட்டுகள், செயற்கை நுண்ணறிவு உதவியுடனான நோய்நிர்ணயம், எண்ணிம சுகாதார பினதொடர் கண்காணிப்பு மற்றும் தொலை மருத்துவம் உள்ளடங்கலான சுகாதாரப் பாராமரிப்புச் சேவைகள்;

(iii) எவையேனும் இயைபான எழுத்திலான சட்டங்களின்கீழ் குறித்துரைக்கப் பட்ட அளவுக்கு அல்லது இலங்கை அரசாங்கத்துடன் அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் எழுத்திலான உடன்படிக்கைக்கிணங்க, இராசதந்திர தூதரகங்கள் தொடர்பான ஓர் ஒழுங்கமைப்புக்கு வழங்கப்பட்ட சேவைகள்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19.** இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரை களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் த்திணைக்களத்தில் பத்ப்பிக்கப்பெற்றது